


16. 04. 2026

## தலைப்புச் செய்திகள்

- மக்களவையில் மகளிருக்கான இட ஒதுக்கீடு, தொகுதி மறு வரையறை, எல்லை சட்டத்திருத்த மசோதாக்கள் இன்று தாக்கல் செய்யப்பட்டன.
- தொகுதி மறுவரையறை மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. வினர் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.
- தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் வாக்குப் பதிவிற்கு ஒருவாரமே எஞ்சியுள்ள நிலையில் அரசியல் கட்சியினர் அனல் பறக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.
- ஆஸ்திரிய பிரதமரின் இந்திய வருகை இருநாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தை மேம்படுத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- மால்டா சர்வதேச பேட்மிட்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சிராக்சென் – ஆஸ்திரியாவின் TOMIC-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

### நாடாளுமன்றம்

நாடாளுமன்ற நடப்பு பட்ஜெட் கூட்டத் தொடரின் 3 நாள் சிறப்பு அமர்வு இன்று தொடங்கியது.

மக்களவையில் மத்திய சட்டம், நீதித்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால் மகளிருக்கான இட ஒதுக்கீடு மசோதா மற்றும் தொகுதி மறுவரையறை மசோதாக்களை அறிமுகம் செய்தார்.

உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, மத்திய எல்லை சட்டத்திருத்த மசோதாவை அவையில் தாக்கல் செய்தார்.

இம்மசோதாக்களை தாக்கல் செய்து பேசிய திரு. அர்ஜுன் ராம் மெஹ்வால், நாடுமுழுவதிலும் மகளிருக்கு

சீரான, இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

நடப்பு எண்ணிக்கையிலிருந்து மகளிருக்கான இடங்கள் மக்களவையில் 50 சதவிகிதம் அதிகரிக்கப்படுவது அவசியம் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்த அதிகரிப்பால் மக்களவையில் 815 உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள் என்றும்,

இதில் 272 இடங்கள் மகளிருக்கு ஒதுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இந்நடவடிக்கையால் யாருக்கும் எந்தவித இழப்பும் இருக்காது என்றும்,

ஒவ்வொரு மாநிலத்திலும் ஒட்டுமொத்த எண்ணிக்கை எதிர்காலங்களில் மாற்றம் இல்லாமல் தொடரும் என்றும் குறிப்பிட்டார்.

அரசியல் நீதியை நிலைநாட்டும் வகையில் மத்திய அரசு இந்த வரலாற்று சிறப்பு வாய்ந்த மசோதாவை அறிமுகம் செய்ததாக அவர் குறிப்பிட்டார்.

மகளிருக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு வழங்குவதற்கான தருணம் வந்துவிட்டதாக கூறினார்.

முன்னதாக இந்த மசோதாவை அறிமுகம் செய்ய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று எதிர்கட்சிகள் கோரினர்.

அதனையடுத்து நடைபெற்ற வாக்கெடுப்பில் மசோதாவை ஆதரித்து 251 பேரும்,

எதிர்ப்பு தெரிவித்து 185 பேரும் வாக்களித்ததாக அவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா அறிவித்தார்.

இம்மசோதாக்களை ஆரம்ப நிலையிலேயே எதிர்த்த காங்கிரஸ் உறுப்பினர் திரு. கே. சி. வேணு கோபால் நாட்டின் கூட்டாண்மை அமைப்பிற்கு இம்மசோதாக்கள் ஊறுவிளைவிக்கும் என்று குறை கூறினார்.

அப்போது குறுக்கிட்ட திரு. அமித்ஷா இம்மசோதாக்களில் தொழில்நுட்பம் சார்ந்த குறைகளை மட்டுமே உறுப்பினர் தெரிவிக்கலாமே தவிடு அதனைப்பற்றி வேறு எதுவும் பேச முடியாது என்று திட்டவட்டமாக குறிப்பிட்டார்.

இம்மசோதாக்களை அவசரமாக கொண்டு வருவதற்கான தேவை குறித்து கேள்வி எழுப்பிய சமாஜ்வாடி கட்சி உறுப்பினர் திரு. அகிலேஷ் யாதவ், மக்கள் தொகை கணக்கெடுப்பு முதலில் நடைபெறட்டும் என்றார்.

இம்மசோதாக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்த திரிணாமுல் காங்கிரஸ், எதிர்கால மறுவரையறை நடைமுறைகளுக்கு ஏற்ப மகளிர் மசோதா வடிவமைக்கப் பட்டிருப்பதாக குறை கூறினார்.

முன்னதாக அவை இன்று கூடியபோது, பின்னணி பாடகி ஆஷா போஸ்லேயின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப் பட்டது.

70 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய திரைப்பட இசைத் துறையில் தனி முத்திரையை பதித்து அளப்பரிய பணியை ஆஷா போஸ்லே வழங்கியுள்ளதாக திரு. ஓம்பிர்லா புகழாரம் சூட்டினார்.

மறைந்த மோஹ்சீனா கித்வாய், ஹரிநாராயண், அபு ஹசேன் கான் சௌத்ரி உள்ளிட்டோரின் மறைவிற்கும் அவையில் இரங்கல் குறிப்புகள் வாசிக்கப்பட்டன.

❖❖❖❖❖❖❖❖❖❖

உறுப்பினர்கள்

மாநிலங்களவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அவைத் தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் இன்று பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

பி.ஜே.பி.யின் தேசிய தலைவர் திரு. நிதின் நபின் அக்கட்சியின் தெரேஷ், சிவேஷ், ஜோஹன், வினோத், சுஜித், லக்ஷ்மி வர்மா, சஞ்சய் பாத்யா ஆகியோர் உறுப்பினர்களாக பதவியேற்றனர்.

ஐக்கிய ஜனதாதளின் ராம்நாத் தாகூர், ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சாவின் உபேந்திர புஷ்வாஹா,

காங்கிரஸின் அபிஷேக் மானுசிங்வி, ஃபுலோ தேவி, கரம் வீர் சிங், அனுராக் ஷர்மா, வெம் நரேந்திர ரெட்டி உள்ளிட்டோரும் உறுப்பினர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து மாநிலங்களவை நாளை வரை ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

தி. மு. க. போராட்டம்

இதனிடையே தொகுதி வரையறை மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. சார்பில் அக்கட்சியின் தலைவர் திரு. மு. க. ஸ்டாலின் இன்று நாமக்கல்லில் கருப்பு கொடி ஏற்றி போராட்டம் தொடங்கி வைத்தார்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தி.மு.க.வினர் இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் - பிரச்சாரம்

தமிழ்நாட்டில் 234 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற இன்னும் ஒரு வாரமே எஞ்சியுள்ள நிலையில் அரசியல் கட்சியினர் அனல்பறக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தி. மு. க. தலைவர் திரு. மு. க. ஸ்டாலின் நாமக்கல் உழவர் சந்தை பகுதியில் வியாபாரிகள், பொதுமக்களிடையே இன்று வாக்குகளை சேகரித்தார்.

கோவையில் போட்டியிடும் அஇஅதிமுக மற்றும் பா.ஜ.க. வேட்பாளர்களை ஆதரித்து பேசிய அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி, மக்களை நம்பி தமது கட்சி களத்தில் உள்ளதாக கூறினார்.

தி. மு. க. வேட்பாளர்கள் பணத்தை நம்பி களமிறங்குவதாகவும், கோவைப் பகுதியில் தொழில் துறையினர் கவனத்துடன் இருக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அஇஅதிமுக ஆட்சிக்கு வந்ததும், பொய் வழக்குகள் பதிவு செய்து வரும் அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கூறினார்.

ராமநாதபுரத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டிய பி.ஜே.பி.யின் திரு. அண்ணாமலை கடந்த 5 ஆண்டுகளில் இத்தொகுதியில் அடிப்படை வசதிகள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை என குற்றம்சாட்டினார்.

தர்மபுரி பாலக்கோட்டில் அஇஅதிமுக வேட்பாளருக்கு ஆதரவாக களமிறங்கிய பா.ம.கவின் திரு. அன்புமணி தி.மு.க. ஆட்சியில் தர்மபுரி புறக்கணிக்கப் பட்டதாகவும், அனைத்து திட்டங்களும் கிடப்பில் போடப்பட்டிருப்பதாகவும் குறை கூறினார்.

நாகை கீழ்வேளூர் சட்டப்பேரவை தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் தமக்கு வாய்ப்பு வழங்கப்பட்டால் கல்வித் துறையில் சீர்த்திருத்தங்கள் கொண்டுவரப்படும் என உறுதியளித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

சின்னம் பதிவேற்றும் பணிகள்

இந்நிலையில் சட்டப்பேரவை தேர்தலுக்காக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் பெயர், சின்னம் பதிவேற்றும் பணிகள் பல்வேறு மாவட்டங்களில் இன்று தொடங்கின.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் 9 சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் சின்னம் பொருத்தும் பணிகளை மாவட்ட தேர்தல் அலவலர் திரு. வே. சரவணன் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாவட்டத்தில் வாக்குச் சாவடிகள் மையங்களின் அடிப்படை வசதிகளையும் ஆய்வு செய்தார்.

சிவகங்கையில் வெளிப்படைத் தன்மையுடன் இப்பணிகள் நடைபெறுவதாக மாவட்ட தேர்தல் அலவலர் திருமதி. பொற்கொடி தெரிவித்துள்ளார்.

இதனிடையே திருச்சி, அரியலூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் தேர்தல் பணியில் ஈடுபடுவோர் நாளைமுதல் வரும் 19-ம் தேதிவரை தபால் வாக்களிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖❖

ராணிப்பேட்டை

ராணிப்பேட்டை மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு 2-ம் கட்ட பயிற்சி வகுப்பு இன்று நடைபெற்றது.

இந்த பயிற்சிகள் தங்களுக்கு உதவிகரமாக இருந்ததாக இதில் பங்கேற்ற மஹேந்திரவாடி அரசு பள்ளி தலைமை ஆசிரியர் தெரிவித்தார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

ஆஸ்திரிய பிரதமர்

இந்தியா – ஆஸ்திரிய நாடுகள், கட்டமைப்பு, புதுமையான சிந்தனைகள், நீடித்த நிலைத்தன்மை, படைப்பாற்றல் திறன் போன்றவற்றில் இணைந்து செயல்படுவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி, தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரிய பிரதமர் டாக்டர் கிறிஸ்டியன் ஸ்டாக்கருடன் இணைந்து புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய

அவர், ஆஸ்திரிய பிரதமரின் வருகை இருநாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தையும், முதலீடுகளையும் மேம்படுத்தும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

இருநாடுகளுக்கு இடையே இளையோர்கள் பரிவர்த்தனைக்கான திட்டங்கள் தொடங்கப் பட்டுள்ளதாக கூறிய பிரதமர், பாதுகாப்பு, செமி கண்டக்டர், குவாண்டம், உயிரி தொழில்நுட்பத் துறைகளில் இருநாடுகளின் ஒத்துழைப்பு மேலும் வலுப்படும் என்றார்.

தமது இந்திய பயணம் ஆஸ்திரிய இந்திய நட்புறவின் மைல் கல்லாக திகழ்கிறது என்று டாக்டர் கிறிஸ்டின் ஸ்டாக்கர் தெரிவித்தார்.

முன்னதாக பிரதமர், ஆஸ்திரிய பிரதமருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

பரஸ்பர நலன் சார்ந்த உலகளாவிய சர்வதேச பிராந்திய விஷயங்கள் குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டது.

இருநாடுகளுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின.

முன்னதாக ராஜ்காட்டில் தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் நினைவிடத்தில் ஸ்டாக்கர் அஞ்சலி செலுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

மால்டா சர்வதேச பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சிராக்சென் – ஆஸ்திரியாவின் TOMIC-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் மும்பையில் இன்று இரவு ஏழரை மணிக்கு மும்பை இண்டியன்ஸ் – பஞ்சாப் கிங்ஸை எதிர்கொள்கிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖